# இரண்டாம் திருப்புதல் பொதுத்தேர்வு - 2023

## பத்தாம் வகுப்பு

பதிவு எண் :

## தமிழ்

நேரம்: 3.00 மதிப்பெண்கள்: 100

பகுதி - I

I. அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும். கொடுக்கப்பட்ட நான்கு விடைகளில் சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக. 15 x 1 = 15

1. 'பாடு இமிழ் பனிக்கடல் பருகி' என்னும் முல்லைப்பாட்டு அடி உணர்த்தும் அறிவியல் செய்தி யாது?
   அ) கடல் நீர் ஆவியாகி மேகமாதல் ஆ) கடல்நீர் குளிர்ச்சி அடைதல்
   இ) கடல்நீர் ஒலித்தல் ஈ) கடல்நீர் கொந்தளித்தல்
2. "மருந்தே ஆயினும் விருந்தொடு உண்" ! எனும் தொடர் இடம் பெற்ற நூல் ________.
   அ) கொன்றைவேந்தன் ஆ) குறுந்தொகை இ) திருக்குறள் ஈ) நற்றிணை
3. தொல்காப்பியம் குறிப்பிடும் இசைக்கருவி ________.
   அ) ஜால்ரா ஆ) பறை இ) உறுமி ஈ) நாகசுரம்
4. வீட்டைத் துடைத்துச் சாயம் அடித்தல் - இவ்வடி குறிப்பிடுவது ________.
   அ) காலம் மாறுவதை ஆ) வீட்டைத் துடைப்பதை
   இ) இடையறாது அறப்பணி செய்தலை ஈ) வண்ணம் பூசுவதை
5. தொடர்மொழி ________.
   அ) ஆடு மேய்ந்தது ஆ) அந்த மொழி இ) அம்மா ஈ) அசையாமை
6. எய்துவர் எய்தாப் பழி - இக்குறளடிக்குப் பொருந்தும் வாய்பாடு எது? ________.
   அ) கூவிளம் தேமா மலர் ஆ) கூவிளம் புளிமா நாள்
   இ) தேமா புளிமா காசு ஈ) புளிமா தேமா பிறப்பு
7. திருவள்ளுவர் தவச்சாலையை அமைத்தவர் ________.
   அ) நக்கீரன் ஆ) அதிவீரராமபாண்டியர்
   இ) ம.பொ.சிவஞானம் ஈ) தமிழ்திரு. இரா.இளங்குமரன்
8. தம் ஆநிரைகளை மீட்கச் செல்லுதல் ________.
   அ) பாடாண் திணை ஆ) கரந்தைத் திணை இ) காஞ்சித் திணை ஈ) வஞ்சித் திணை
9. சுதந்திர இந்தியாவின் மகத்தான சாதனையும் சவாலுமாக ஜெயகாந்தன் கருதுவது ________.
   அ) அரசின் நலத்திட்டங்களைச் செயல்படுத்துதல்
   ஆ) பெற்ற சுதந்திரத்தைப் பேணிக் காத்தல்
   இ) அறிவியல் முன்னேற்றம் ஈ) பால் வழுவமைதி
10. சரியான அகர வரிசையைத் தேர்ந்தெடுக்க.
    அ) உழவு, மண், ஏர், மாடு ஆ) மண், மாடு, ஏர், உழவு
    இ) உழவு, ஏர், மண், மாடு ஈ) ஏர், உழவு, மாடு, மண்
11. 'அருளைப் பெருக்கி அறிவைத் திருத்தி மருளை அகற்றி மதிக்கும் தெருளை' - என்று இவ்வடிகளில் குறிக்கப்படுவது எது?
    அ) தமிழ் ஆ) அறிவியல் இ) கல்வி ஈ) இலக்கியம்

பாடலைப் படித்து பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.

"வாளால் அறுத்துச் சுடினும் மருத்துவன் பால்
மாளாத காதல் நோயாளன் போல் மாயத்தால்
மீளாத் துயர் தரினும் வித்துவக் கோட்டம்மா ! நீ
ஆளா உனதருளே பார்ப்பன் அடியேனே"

12. இப்பாடல் இடம் பெற்ற நூல் எது?
    அ) நற்றிணை ஆ) சிலப்பதிகாரம் இ) புறநானூறு ஈ) பெருமாள் திருமொழி
13. இப்பாடலின் ஆசிரியர் ________.
    அ) ஔவையார் ஆ) குலசேகராழ்வார்
    இ) நல்வேட்டனார் ஈ) பெருங்கௌசிகனார்
14. 'மாளாத' இத்தொடரின் பொருள்? ________.
    அ) தீராத ஆ) விளையாட்டு இ) சுட்டாலும் ஈ) புண்
15. பாடலின் இடம்பெற்றுள்ள அடி எதுகைச் சொற்களை குறிப்பிடுக.
    அ) வாளால், அறுத்து ஆ) மாளாத, மாயத்தால்
    இ) வாளால், மாளாத ஈ) ஆளா, அடியேனே


Scanned by CamScanner

www.Padasalai.Net - No.1 Educational Website in Tamilnadu



பகுதி - II (மதிப்பெண் 18)

பிரிவு - 1

**4 x 2 = 8**

ஏவையேனும் நான்கு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்க :
21வது வினாவிற்குக் கட்டாயமாக விடையளிக்கவும்.

16. விடைக்கேற்ற வினாக்கள் அமைக்க:
    அ) இளங்கோ தந்த சிலம்பு தமிழினத்தின் பொதுச் சொத்தாகும்.
    ஆ) 1956 ஆம் ஆண்டு நவம்பர் 1-ஆம் நாள் கன்னியாகுமரி மாவட்டம் தமிழ்நாட்டுடன் இணைந்தது.
17. யாருக்கு இவ்வுலகமே உரிமை உடையதாகும் எனத் திருக்குறள் குறிப்பிடுகிறது?
18. மெய்க்கீர்த்திகள் எவற்றை உணர்த்தும்?
19. மருத்துவத்தில் மருந்துடன் அன்பும் நம்பிக்கையும் ஆற்றும் பங்கினை எழுதுக.
20. பாசவர், வாசவர், மண்ணுள் விளைஞர், உமணர், பல் நிண விலைஞர் - சிலப்பதிகாரம் காட்டும் இவ்வணிகர்கள் யாவர்?
21. 'கண்' என முடியும் திருக்குறளை எழுதுக.

பிரிவு - 2

**5 x 2 = 10**

ஏதேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் குறுகிய விடையளிக்க.

22. பொருத்தமானவற்றைச் சொற்பெட்டியில் கண்டு எழுதுக.
    அ) வாழ்க்கையில் _______ மீண்டும் வெல்லும். - இதை தத்துவமாய் _______ க் கூத்து சொல்லும்.
    (தோற்பாவை, தோற்பவை)
    ஆ) தெருக்கூத்தில் நடிகருக்குக் கைத்தட்டலே _______ அதில் வரும் காசு குறைந்தாலும் அதுவேயவர் _______. (விருது, விருந்து)
23. வினா வகையையும் விடை வகையையும் சுட்டுக :
    'காமராசர் நகர் எங்கே இருக்கிறது'
    'இந்த வழியாக செல்லுங்கள்' என்று விடையளிப்பது
24. தொழிற் பெயருக்கும் வினையாலணையும் பெயருக்கும் உள்ள வேறுபாடுகள் இரண்டினை எழுதுக.
25. கலைச்சொற்கள் தருக : அ) HUMANISM ஆ) EPIC LITERATURE

குறிப்பு : செவி மாற்றுத்திறனாளர்களுக்கான மாற்று வினா :
கல், பழம் - இச்சொற்களின் கூட்டப் பெயர்களை எழுதுக.

26. 'கொள்வோர் கொள்க; குரைப்போர் குரைக்க!
    உள்வாய் வார்த்தை உடம்பு தொடாது'
    அ) அடி எதுகை எடுத்தெழுதுக.
    ஆ) கொள்க, குரைக்க - இலக்கணக்குறிப்பு தருக.
27. தொகைச் சொற்களைப் பிரித்து எழுதி தமிழ் எண்ணுரு தருக.
    மூவேந்தர்களால் நாற்திசையும் போற்றி வளர்க்கப்பட்ட முத்தமிழே. உலக மொழிகளுள் உயர்ந்ததென்ற செம்மாந்த கூற்றிற்கு தமிழ் இலக்கியங்களில் அமைந்துள்ள இருதினை அமைப்பே காரணம் ஆகும்.
28. மயங்கிய - பகுபத உறுப்பிலக்கணம் தருக.

பகுதி - III (மதிப்பெண் 18)

பிரிவு - 1

**2 x 3 = 6**

எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடையளிக்க.

29. 'புளியங்கன்று ஆழமாக நடப்பட்டு உள்ளது' - இதுபோல இளம் பயிர் வகை நான்கின் பெயர்களைத் தொடரில் அமைக்க.
30. வைத்தியநாதபுரி முருகன் குழந்தையாக அணிந்திருக்கும் அணிகலன்களுடன் செங்கீரை ஆடிய நயத்தை விளக்குக.
31. உரைப் பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடை தருக.

    தேவராட்டம், வானத்துத் தேவர்கள் ஆடிய ஆட்டம் எனப் பொருள் கொள்ளப்படுகிறது. இது ஆண்கள் மட்டுமே ஆடும் ஆட்டம். உறுமி எனப் பொதுவாக அழைக்கப்படும் 'தேவதுந்துபி' தேவராட்டத்திற்குரிய இசைக்கருவி. இந்தக் கலை, வேட்டிக் கட்டியும் தலையிலும் இடையிலும் சிறு துணி கட்டியும் எளிய ஒப்பனையுடன் நிகழ்த்தப்படும்.

    அ) தேவராட்டத்துக்கு பயன்படக்கூடிய இசைக்கருவியின் பெயர் என்ன?
    ஆ) தேவராட்டம் பொதுவாக எவ்வாறு அழைக்கப்படுகிறது?
    இ) இவ்வுரைப்பத்திக்கு பொருத்தமான தலைப்பு ஒன்று தருக.

Scanned by CamScanner

Kindly send me your questions and answerkeys to us : Padasalai.Net@gmail.com

பிரிவு - 2

எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்க. **2 x 3 = 6**

34வது வினாவிற்குக் கட்டாயமாக விடையளிக்கவும்.

32. 'சித்தாளின் மனச்சுமைகள்
செங்கற்கள் அறியாது' - இடம் சுட்டிப் பொருள் தருக.

33. 'முதல் மழை விழுந்ததும்' என்னவெல்லாம் நிகழ்வதாக கு.ப.ரா. கவி பாடுகிறார்?

34. அடிபிறழாமல் எழுதுக :
'நவமணி வடக்கயில்போல்' எனத் தொடங்கும் தேம்பாவணிப் பாடல்

(அல்லது)

'தண்டலை' எனத் தொடங்கும் கம்பராமாயணப் பாடல்.

பிரிவு - 3

எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்க. **2 x 3 = 6**

35. 'தலையைக் கொடுத்தேனும் தலைநகரைக் காப்போம்' - இடம் சுட்டி பொருள் விளக்கம் தருக.

36. தற்குறிப்பேற்ற அணியை சான்றுடன் விளக்குக.

37. முயற்சி திருவினை யாக்கும் முயற்றின்மை
இன்மை புகுத்தி விடும் - இக்குறட்பாவினை அலகிட்டு வாய்பாடு தருக.

பகுதி - IV (மதிப்பெண்கள் 25)

அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும். **5 x 5 = 25**

38. அ) ஆற்றுப்படுத்துதல் என்பது அன்றைக்குப் புலவர்களையும் கலைஞர்களையும் வள்ளல்களை நோக்கி நெறிப்படுத்துவதாக இருந்தது. அது இன்றைய நிலையில் ஒரு வழிகாட்டுதலாக மாறியிருப்பதை விளக்குக.

(அல்லது)

ஆ) பண்டையத் தமிழரின் திணைநிலை வாழ்க்கை முறையையும் இன்றைய தமிழரின் வாழ்க்கை முறையையும் ஒப்பிட்டு ஒவ்வொருவர் கருத்தில் உள்ள பொதுக் கருத்தை எழுதுக.

39. அ) கருணையனின் தாய் மறைவுக்கு, வீரமாமுனிவர் பூக்கள் போன்ற உவமைகளாலும் உருவக மலர்களாலும் நிகழ்த்திய கவிதாஞ்சலியை விவரிக்க.

(அல்லது)

ஆ) 'காலக்கணிதம்' கவிதையில் கவிஞர் கண்ணதாசன் குறிப்பிட்டுள்ள கருத்துகளுள் உங்களைக் கவர்ந்த ஐந்து கருத்துகளை எழுதுக.

40. காட்சியைக் கண்டு கவினுற கவிதையாக்குக.



(அல்லது)

ஆ) மொழிபெயர்க்க

The Golden sun gets up early in the morning and starts its bright rays to fade away the dark. The milky clouds start their wandering. The colourful birds start twitting their morning melodies in percussion. The cute butterflies dance around the flowers. The flowers' fragrance fill the breeze. The breeze gently blows everywhere and makes everything pleasant.

Scanned by CamScanner

www.Padasalai.Net - No.1 Educational Website in Tamilnadu



40. செவி மாற்றுத்திறனாளர்களுக்கான மாற்று வினா:

பிரான்சு தேசிய நூற்கூடத்தில் (Bibliothque National) ஏறக்குறைய ஆயிரம் பழைய தமிழ் ஏடுகளும் கையெழுத்துப் பிரதிகளும் உள. இவற்றுள் சில இந்தியாவிலேயே ஐரோப்பியர் யாத்த இலக்கணங்களும் கையெழுத்துப் பிரதிகளும் இந்நூற்வடத்தில் இருக்கின்றன. அங்கிருக்கும் தமிழ் நூல்களின் பட்டியல்களைப் படித்த பொழுது இன்றும் அச்சிடப் பெறாத நூல்கள் சிலவற்றின் தலைப்பைக் கண்டேன். 'மாணிக்கவாசகர் பிள்ளைத்தமிழ், சரளப் புத்தகம், புதுச்சேரி அம்மன் பிள்ளைத்தமிழ் முதலிய நூல்களும் அங்கு உள' - தனிநாயக அடிகள்.

1. தேசிய நூற்கூடத்தில் (Bibliothque National) எவ்வளவு தமிழ் பிரதிகள் உள்ளன?
2. எந்த நாட்டு கவிஞர்கள் யாத்த பிரதிகள் உள்ளது?
3. எந்த நூலகத்தில் இன்றும் அச்சிடப் பெறாத நூல்கள் யாவை?
4. இச்செய்தியை நமக்கு தெரிவித்த அடிகளின் பெயர் யாது?
5. இந்த நூலகம் எந்த நாட்டில் உள்ளது?

41. அ) நயம் பாராட்டுக :

கோடையிலே இளைப்பாற்றிக் கொள்ளும் வகை கிடைக்க
குளிர்தருவே தருநிழலே நிழல்கனிந்த கனியே
ஓடையிலே ஊறுகின்ற தீஞ்சுவைத் தண் ணீரே
உகந்ததண்ணீர் இடைமலர்ந்த சுகந்தமாண மலரே
மேடையிலே வீசுகின்ற மெல்லியபூங்காற்றே
மென்காற்றில் விளைசுகமே சுகத்தில் உறும் பயனே
ஆடையிலே எனைமணந்த மணவாளா பொதுவில்
ஆடுகின்ற அரசே என் அலங்கல்அணிந் தருளே - வள்ளலார்

41. ஆ) நூலக உறுப்பினர் படிவத்தை நிரப்புக :

பகுதி - V (மதிப்பெண்கள் : 24)

அனைத்து வினாக்களுக்கும் விரிவாக விடையளிக்கவும். **3 x 8 = 24**

42. அ) உங்கள் பகுதியில் நடைபெற்ற அரசுப் பொருட்காட்சிக்குச் சென்று வந்த நிகழ்வை கட்டுரையாக்குக. (அல்லது)

ஆ) நாளிதழ் ஒன்றின் பொங்கல் மலரில் 'உழவுத் தொழிலுக்கு வந்தனை செய்வோம்' என்ற உங்கள் கட்டுரையை வெளியிட வேண்டி அந்நாளிதழின் ஆசிரியருக்குக் கடிதம் எழுதுக.

43. அ) உங்கள் இல்லத்துக்கு வருகை தந்த உறவினருக்கு நீங்கள் செய்த விருந்தோம்பலை அழகுற விவரித்து எழுதுக. (அல்லது)

ஆ) நாட்டு விழாக்கள் - விடுதலைப் போராட்ட வரலாறு - நாட்டின் முன்னேற்றத்தில் மாணவர் பங்கு - குறிப்புகளைக் கொண்டு ஒரு பக்க அளவில் 'மாணவப் பருவமும் நாட்டுப் பற்றும்' என்ற தலைப்பில் மேடை உரை எழுதுக.

44. அ) உங்கள் பள்ளி நிகழ்வுகளைத் தொகுத்து அறிக்கை எழுதுக.

| மகளிர் நாள் விழா |
|---|
| இடம் : கலையரங்கம் நாள் : 01.2023 |
| கலையரங்கத்தில் ஆசிரியர்கள், மாணவர்கள் கூடுதல் - தலைமையாசிரியரின் வரவேற்பு - இதழாளர் கலையரசியின் சிறப்புரை - ஆசிரியர்களின் வாழ்த்துரை - மாணவத் தலைவரின் நன்றியுரை. |

(அல்லது)

ஆ) அழகிரிசாமியின் 'ஒருவன் இருக்கிறான்' சிறுகதையில் மனிதத்தை வெளிப்படுத்தும் கதை மாந்தர் குறித்து எழுதுக.

45. அ) சங்க காலத்து அறங்கள் இன்றும் தேவையே என்பதற்கு எடுத்துக்காட்டுகள் தந்து விரிவாக விளக்குக. (அல்லது)

ஆ) குறிப்புகளைக் கொண்டு கட்டுரை எழுதித் தலைப்பிடுக:

முன்னனுரை - சாலைப்பாதுகாப்பு உயிர்ப் பாதுகாப்பு - சாலை விதிகள் ஊர்தி ஓட்டுநருக்கான நெறிகள் - விபத்துகளைத் தவிர்ப்போம் விழிப்புணர்வு தருவோம் - முடிவுரை.

******

Kindly send me your questions and answerkeys to us : Padasalai.Net@gmail.com
Scanned by CamScanner